## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி தீவிர நடவடிக்கை!

# மதுரை மாநகரில் வெள்ளச் சேதப் பகுதிகளில் அமைச்சர்கள் ஆய்வு!








கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகரில் பெய்த திடீர் பெருமழையால் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பு மீட்பு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். உடன் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அருண் தம்புராஜ், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன் மற்றும் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு

*வேலூர், அக் 27 -*

வேலூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர், தலைமை தணிக்கைகுழு உறுப்பினர் தி.அ.முகமது சகி தலைமையில் 29.10.2024 - செவ்வாய்க் கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க.



அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 2024 அக்டோபர் 29ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வழங்குதல் மற்றும் சரி பார்த்தல்.

வாக்குச்சாவடி சிறப்பு முகாமில் BLA2 மற்றும் BLC ஆகியோர் கலந்துகொள்ள கோருதல்.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தாமிரபரணி ஆற்றிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு!

### தமிழ்நாடு அரசு உத்தரவு!

*சென்னை, அக். 27 -*

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் உள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங் கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் கால்வாய், மருதூர் கீழக் கால் கால்வாய், தெற்கு பிரதான கால்வாய் மற்றும் வடக்கு பிரதான கால்வாய்களின் கீழுள்ள 86,107 ஏக்கர் நேரடி மற்றும் மறைமுக பாசன பரப்புகளுக்கு பிசான பருவ சாகுபடிக்கு 28.10.2024 முதல் 31.03.2025 வரை தண்ணீர் திறந்து விடுவதற்குஅரசு ஆணையிட்டுள்ளது.

## சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது!

*சிவகங்கை, அக். 27 -*

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்ச வர்ணம் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் முருகன், சு.மனோகரன், பொருளாளர் பாண்டியராஜன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மார்கரெட் கமலா, மாவட்ட ஆதிராவிட நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து இளைஞரணி தங்க செல்வம், மாணவரணி ராம்குமார், அழகுசுந்தரம், அங்குசாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் வேல்முருகன், ரமேஷ், மகளிர் அணி மஞ்சுளா, முருகன் மற்றும் பாகமுகவர்கள் உட்பட ஊராட்சி செயலர்கள், நிர்வாகிகள், கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது.

கழக தலைவர் தளபதி முதல்வர் அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் நல்லாட்சி நடத்தி வருகிறார். நல்லாட்சி பணிகள் மக்களிடம் விரைவாக சென்று அடையும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக நியமித்ததை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் தெற்கு ஒன்றியத்தில் அனைவரும் தீவிரமாக பணியாற்றுவது என்றும் அதிகளவில். புதிதாக வாக்காளர் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சிவகங்கை நகர் சிவகங்கை நகரக் கழக செயல் வீரர்கள் கூட்டம் அவைத் தலை வர் ஐ. மதார் தலைமையில் நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நகர் கழக நிர்வாகிகள் வீனஸ் ராமநாதன், ஜெயகாந்தன், வீரகாளை, முருகேசன்,ஆறு. சரவணன் அ..ஆயூப்கான், சேகர், சந்திரசேகர், தகவல் தொழில்நுட்ப அணி சதீஷ்,இலக்கிய அணி ராஜபாண்டியன் மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் தளபதி அவர்கள் திராவிட மாடல் அரசின் மக்கள்திட்டப் பணிகள் மக்களிடம் விரைவாக சென்றடையும் வகையில் மாநில கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக நியமித்ததற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறது.

நவம்பர் மாதம் நடைபெற வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் 27 வார்டுகளிலும் பாக முகவர்கள் வார்டு கழக செயலாளர்கள் இணைந்து தீவிரமாக வாக்காளர் பட்டியல் பணிகளை மேற்கொள்வது என்றும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.